Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 310/2024**

DATE :12.06.2026

Depositions of witness for Prosecution

PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name | பாரதி உஷா | Caste | |
| Father/Husband's Name | ஆனந்த் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12 th day of June 2026

**(எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் திருமதி முத்துக்கனி ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் திண்டுக்கல்லில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். நான் ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் தன்னிச்சையாக தான் கையெழுத்து செய்தேன். ஆஜர் எதிரிகள் என்னை தாக்கியதில் எனக்கு காயம் ஏற்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்தை என்னுடையதுதான். புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

நானும் ஆஜர் எதிரிகளும் சமாதானமாக சென்று விட்டோம் என்று சொன்னால் சரிதான். எவ்வித கட்டாயமும் இன்றி தன்னிச்சையாக தான் சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

Judicial Form No.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 310/2024**

DATE :12.06.2026

Depositions of witness for Prosecution

PW: 2

| | | | |
|---|---|---|---|
| Name | ஜனார்த்தனன் | Caste | |
| Father/Husband's Name | உலகநாதன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12 th day of June 2026

**(எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் திருமதி முத்துக்கனி ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் திண்டுக்கல்லில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அ.சா.1 என்னுடைய அக்கா. வழக்கு சம்பவத்தில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நான் ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். ஆஜர் எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –**

கடந்த 08.05.2022 அன்று மதியம் 12 மணியளவில் என்னுடைய அக்கா வீடு அமைந்திருக்கும் ஊரான ஆகாசம்பட்டிக்கு அவருடைய வீட்டில் இருந்து

பொருட்களை ஏற்றி செல்வதற்காக நானும், என்னுடைய அக்கா மற்றும் என்னுடைய மனைவி மற்றும் என்னுடைய அக்கா மகன் ஆகியவர்கள் சென்ற பொழுது, என்னுடைய அக்காவுக்கும் அக்காவின் கணவருக்கும் இடையே இருந்து வந்த பிரச்சனை சம்பந்தமாக முன் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு ஆஜர் எதிரிகள் என்னுடைய அக்காவை தகாத வார்த்தையால் பேசினார்கள் என்றும், என்னுடைய அக்காவை கன்னத்தில் அடித்து கீழே தள்ளி முதுகில் மிதித்து காயப்படுத்தியதாகவும், என்னையும் ஆஜர் எதரிகள் தகாத வார்த்தையால் பேசி கையாளும் சேராலும் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், என்னுடைய மனைவி மற்றும் என்னுடைய அக்கா சம்பவத்தை விலக்கி விட்ட பொழுது எதிரிகள் செருப்பால் என்னுடைய அக்காவை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், சம்பவத்தில் என்னுடைய அக்காவுக்கும் எனக்கும் காயம் ஏற்பட்டது என்றும், காயம் பட்ட நானும் என்னுடைய அக்காவும் சிகிச்சைக்காக வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றும், நடைபெற்ற சம்பவத்துக்காக என்னுடைய அக்கா வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

நானும் ஆஜர் எதிரிகளும் சமாதானமாக சென்று விட்டோம் என்று சொன்னால் சரிதான். எவ்வித கட்டாயமும் இன்றி தன்னிச்சையாக தான் சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 310/2024**

DATE : 12.06.2026

Depositions of witness for Prosecution

PW: 3

| | | | |
|---|---|---|---|
| Name | கோட்டியப்பசாமி (சார்பு ஆய்வாளர் ) | Caste | |
| Father/Husband's Name | பாலையா | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12 th day of June 2026

**(எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் திருமதி முத்துக்கனி ஆஜர்)**

<u>முதல் விசாரணை</u> –

நான் தற்போது வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர்கள் திரு. பிரகஸ்பதி மற்றும் அய்யனார் ஆகியோர்கள் பணி மாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்ட காரணத்தினால் அவர்கள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதாக சமாதான மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த காரணத்தினால் வழக்கினை நிலுவையில் வைத்திருப்பதால் எவ்வித பலனும்

ஏற்படப்போவதில்லை என்கின்ற காரணத்தினாலும், வழக்கில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க வேண்டிய ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 08.05.2022ம் தேதி 13.45 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. பிரகஸ்பதி நிலையப் பொறுப்பில் இருந்த போது பாரதி உஷா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று நி.கு.எண்.113/2022, சட்டப்பிரிவுகள் 147, 323, 324, 355 IPC, 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அன்றைய தினம் 14.45 மணிக்கு சாட்சிகள் சரவணன், அழகுலட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசா.ஆ.3 மற்றும் அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் பாரதி உஷா, ஜனார்த்தன், அக் ஷரா, சரவணன், அழகுலட்சுமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

கடந்த 16.05.2022ம் தேதி வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் முத்துபிரியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் பெற்றுள்ளார். **காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ. 5 மற்றும் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 22.11.2022ம் தேதி 4 மற்றும் 5 எதிரிகள் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்ற காரணத்தினால் அவகளை கைது செய்யவில்லை. கடந்த 22.02.2023ம் தேதி 1 முதல் 3 எதிரிகள் மாண்புமிகு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் முன்பிணை பெற்ற காரணத்தினால் அவர்களை கைது செய்யவில்லை.

பின்னர் வழக்கின் சட்டப்பிரிவினை 147, 323, 324, 355 IPC, 4 of TNPHW Act–லிருந்து 147, 294(b), 323, 324, 355 IPC, 4 of TNPHW Act–ஆக மாற்றம்

செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சார்பு ஆய்வாளர் திரு. அய்யனார் அவர்கள் வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு மேற்படி சாட்சிகளை விசாரணை செய்த போது முந்தைய ஆய்வாளரிடம் கூறியது போலவே கூறியதால் தனியாக வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை. புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு